Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 88/2008

Deposition of witness for: PW - 10

| | | | |
|---|---|---|---|
| Name | : **திினேஷ்** | Father/Husband Name | : **வடிவேல்** |
| Age | : | Calling | : |
| Date | : 09.04.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 09 day of 04.2026.

( **சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது** ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது மேலூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி ராஜேஷ்கண்ணன் மற்றும் தலைமை காவலர் திரு.ராஜாமணி இறந்துவிட்டதால், நீதியின் நலன் கருதி வழக்கின் விசாரணையை விரைந்து முடிப்பதற்காக தற்போது மேலூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்ற வகையில் வழக்கு கோப்பின் அடிப்படையில் நான் தற்போது கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன்.

மேலூர் காவல் நிலைய தலைக்காவலர் திரு.ராஜா மணி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது 26.12.2006ம் தேதி 14.30 மணிக்கு நிலையத்திற்கு வந்த தகவலை பெற்று 15.00 மணிக்கு மேலூர் அரசு மருத்துவமனை சென்று புகார் வாக்குமூலம் பெற்று 16.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 671/06, பிரிவுகள் 294(b), 323, 324 இதசன்கீழ் முதல தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். பின்னர் ஒரு நகலை புலன்விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திரு.சேது என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

காவல் ஆய்வாளர் சேது வழக்கு கோப்பை புலன்விசாரணைக்கு எடுத்துகொண்டு முதற்கட்ட புலன்விசாரணை முடித்து காவல் ஆய்வாளர் ராஜேஷ்கண்ணாவிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் புலன்விசாரணைக்கு எடுர்ததுக்கொண்டு இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள ராஜா மணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மேலூர் அரசு மருத்துவர் அறிவாசன் மற்றும் ஞானசேகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

. பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து 20.09.2016ம் தேதியன்று 1 மற்றும் 4 எதிரிகளுக்கு பிரிவுகள் 294(b), 323, இதசன்கீழும், 2மற்றும் 3ம் எதிரியின் மீது பிரிவுகள் 294(b), 326 இதசன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான ராஜேஷ் கண்ணன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ராஜாமணி நான் பார்த்ததில்லை என்றால் இல்லை. அவர்களது கையெழுத்து மற்றும் கையொப்பம் எப்படி இருக்கும் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆவணங்களை பார்வையிட்டதன் மூலம் தெரியும். அசாஆ3ல் காவல் நிலையத்திற்கு தகவல்

கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இருக்க அசா1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு அதன்பின்னர்தான் மருத்துவமனைக்கு சென்றதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல, மருத்துவமனைக்கு சென்ற பின்னர்தான் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லப்பட்டது. நான் சொல்வது தவறானது அசாஆ3ன்படி போலீசாரிடம் தகவல் சொல்லி அதன்பின்னர்தான் மருத்துவமனைக்கு வந்ததாக அர்த்தம் என்றால் சரியல்ல. அதை ஒப்புக்கொண்டால் இவ்வழக்கிற்கு பாதகம் என்பதால் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் புகார் மனுவில் ராமச்சந்திரன் கையில் கடப்பாறை, சங்கமுத்து கையில் கம்பும், வீரனசாமி கையில் அருவாள் வைத்திருந்ததாக கோர்வையாக புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் புகார் மனுவில் கடைசி பத்தியில் தாக்கியபோது கையில் ஆயுதம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2) மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக காட்டப்பட்டுள்ள இடத்திற்கு அருகே உள்ள வீட்டவர்களை வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் பார்வை மகஜர் சாட்சியாக மட்டும் விசாரிக்கப்பட்டார்கள். புகார் மனுவில் யார் தன்னை மருத்துவமனையில் சேர்த்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கில் சம்பவத்தில் பயன்பத்திய ஆயுதம் கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. காயம்பட்டவர்களின் ரத்தம்படிந்த ஆடை, ரத்தம்படிந்த மண், ஆகியவை கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. அதேபோல் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் குற்ற இறுதி அறிக்கையில் சட்டப்பிரிவு மாறுதல் செய்யப்பட்டுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட காரணங்களை குறிப்பிட்டு சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, குற்ற இறுதி அறிக்கையிலே மருத்துவர் சான்று பெற்று சட்டப்பபிரிவு மாறுதல் செய்யப்பட்ட காரணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காயச்சான்றிதழ் தனிப்பட்ட சான்றாக வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல, விபத்து பதிவேட்டான அசாஆ2, அசாஆ3, அசாஆ4 ஆகிய ஆவணங்களின் பின்னால் காயத்தின் தன்மை குறித்து காயச்சான்றிதழ் வழங்கி கையொப்பம் செய்துள்ளார். புகார்தாரரின் மகளுக்கும், 1ம் எதிரிக்கும் தகராறு ஏற்பட்டு தனது பெற்றோர் வீட்டில் இருப்பதாக போலீசார் விசாரணையிலும், புகார் மனுவிலும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான், அதுசம்மந்தமாக காவல் நிலைத்திலோ நீதிமன்றத்தில் எந்த புகாரும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, விசாரணை செய்யப்பட்டிருக்கலாம். அசாஆ5ல் மருத்துவமனைக்கு சேர்க்கப்பட்ட நேரம், தேதி என்ன என்றால் 24.12.2006ம் தேதி இரவு 11.25 மணி.

நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை, சொன்னநேரத்தில், சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.